# உறுதிக் காணி விண்ணப்பம்.

## பெயர்மாற்ற விண்ணப்பம் (ATD) சமர்ப்பிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

1. ATD விண்ணப்பப் படிவம் - மாநகரசபையின் ஆதனவரிப் பகுதியில் ரூபா.500.00 செலுத்தி பெற்றுக்கொள்ளவும். ( 6 மாத காலத்திற்கு மாத்திரம் செல்லுபடியாகும்)

2. இவ் விண்ணப்பப்படிவம் காணி உரிமையாளரால் கையொப்பமிடப்பட வேண்டும். அல்லது அற்றோனிதத்துவ உரித்துடையோர் கையொப்பமிடப்பட வேண்டும்.

3. குறித்த விண்ணப்பப்படிவம் காணி உரிமையாளரால் அல்லது அற்றோனிதத்துவ உரித்துடையோரால் அலுவலகத்தில் சமர்ப்பிப்பிக்கப்படல் வேண்டும்.

4. ATD விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தப்படும் போது ஆதன இடாப்பில் உள்ளவரின் பெயரில் இருந்து இறுதியாக காணி பெற்றவர் வரை உறுதி ஒழுங்கில் பூரணப்படுத்தப்பட வேண்டும். ( இறுதியாக செலுத்திய சோலை வரி பற்றுச்சீட்டுடன் விண்ணப்பப்படிவம் பெற வருவது மிகவும் சிறந்தது.)

5. பெயர் மாற்ற விண்ணப்பப்படிவம் காலை 9.00 மணி முதல் மாலை 2.30 மணி வரை விண்ணப்படிவம் முகப்பு அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

6. **சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்.**

   I) கச்சேரியில் பதிவு செய்யப்பட்ட காணி உறுதி மூலப் பிரதியுடன் ஒரு போட்டோ பிரதி.

   II) நில அளவைப் பட மூலப் பிரதியுடன் இரண்டு போட்டோ பிரதிகள் (6 மாத காலத்திற்கு உற்பட்டது. )

   III) 30 வருடத்திற்கு மேற்பட்டதான உறுதி வரலாற்றுத்தாள் மூலப் பிரதியுடன் ஒரு போட்டோ பிரதி. (தெளிவற்ற பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)
   (6 மாத காலத்திற்கு உற்பட்டது. )

   IV) 30 வருடத்திற்கான வரலாற்றுத்தாள் இல்லாவிடின் 30 வருட வரலாற்றை வெளிப்படுத்தக் கூடிய உரிய ஆவணங்கள்.

   V) காணி உபபிரிவிடுகை செய்யப்பட்டிருப்பின் காணி உபபிரிவிடுகை அனுமதி. ( உபபிரிவிடுகை அங்கீகரிக்கப்பட்ட நில அளவைப்படம். ஆதன இலக்க விபரம். )

   VI) குறித்த ஆதனத்தில் கட்டடம் அமைந்திருப்பின் அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடம்.

   VII) காணி வங்கியில் அடகில் இருப்பின் ஈட்டுமுறி படிவம் பெற்று அதனை வங்கியில் பூரணப்படுத்தி ரூபா.300.00 பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவும்.

மாநகர ஆணையாளர்,

மாநகர சபை,

மட்டக்களப்பு.

உ. சிவராசா
பிரதி ஆணையாளர்
மாநகர சபை
மட்டக்களப்பு.